பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 26 செவ்வாய்க்கிழமை 08.02.2022 கதிர் 95

### இது ரகசியம் அல்ல!

இன்றும் என் வாசகர்களுக்கு அரசியல் கிடையாது. சட்டம் தொடர்பான இரண்டு விடயங்களைத் தரலாம் என்று நினைக்கின்றேன்.

ஒன்று – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த இருபத்தியிரண்டு மாதங்களாத்

☞ 2

## நாடு நாசமாகிப் போனதுக்கு மஹிந்தவே காரணம்!



### முன்னாள் எம்.பி. சுரேஷ் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்துக்குப் பின்னர் தான் நாட்டின் பொருளாதாரம் கேள்விக்குறியானது என ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதாரம் கொரோனா காரணமாக பாதாளத்தில் சென்று விட்டது எனச் சொல்கின்றார்கள். அதுஉண்மை இல்லை. மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியின் பின்னர்தான் இவ்வாறான

☞ 9

# பீரிஸ் – ஜெய்சங்கர் டில்லியில் சந்திப்பு

### இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை குறித்தும் பேச்சு

புதுடில்லி, பெப்ரவரி 08

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல்.பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கரை நேற்று சந்தித்தார்.

☞ 9



## 26 பேர் மரணம்

இலங்கையில் 9 பெண்கள் உட்பட மேலும் 26 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பலியாகியுள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்று முன்தினம் உறுதிப்படுத்திய மரணங்களில் 17 ஆண்களும், 9 பெண்கள் உள்ளடங்கியுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 30 வயதுக்குட்பட்ட இருவர் உள்ளடங்குகின்றனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின்மொத்தஎண்ணிக்கை 15 ஆயிரத்து 621ஆக அதிகரித்துள்ளது.

## ஏலத் தொகை ரூ.55 லட்சத்தையும் தருகிறோம் எங்கள் படகுகளை எம்மிடமே தந்து விடுங்கள்!

### இராமேஸ்வரம் படகு உரிமையாளர்கள் சங்கம் இரந்து கோரிக்கை

(ந.லோகதயாளன்)


யாழ்ப்பாணம், பெப்.08

இலங்கையில் ஏலம் விடப்பட்ட எங்களது படகுகளுக்கான 55 லட்சம் ரூபாவை நாங்களே செலுத்தத் தயாராகவுள்ளோம். அவற்றை எம்மிடமே மீள ஒப்படைக்க வேண்டும் என இராமேஸ்வரம் இழுவைப்படகு உரிமையாளர் சங்க தலைவர் யேசுராஜா இரந்துகோரிக்கை விடுத்தார்.

தமிழக மீனவர்களின் 105 படகுகள் 2018ஆம் ஆண்டிற்கு முன்பு இலங்கை

☞ 9

## தமிழக மீனவர்களின் 135 படகுகள் ஏலத்தில்



(ந.லோகதயாளன், இ.கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)

யாழ்., காரைநகரில் வைத்து தமிழக மீனவர்களின் 135 படகுகள் நேற்று ஏலத்தில் விடப்பட்டன. அவை 52

☞ 9

## கோட்டா - மஹிந்த தலைமையில் ஆளுங்கட்சியின் முக்கிய கூட்டம்

### மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல் குறித்தும் பேச்சு



ஆளுங்கட்சி உறுப்பினர்கள்குழுக்கூட்டம்ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷமற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரது தலைமையில் நேற்று

☞ 9

## 2 படகுகளுடன் 14 மீனவர் இன்று அதிகாலை கைது!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.08

நெடுந்தீவு அருகே எல்லை தாண்டி இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி உள் நுழைந்தவை எனக் கூறப்படும் தமிழக மீன்பிடிப் படகுகள் இரண்டு இன்று அதிகாலையில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட படகில் இருந்த இராமேஸ்வரம் பகுதி 14 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதான 8 பேர் பிணையில் விடுவிப்பு

(வவுனியா நிருபர்)

குண்டுகளைத் தம் வசம் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் 2019ஆம் ஆண்டு கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு வவுனியா நீதிமன்றம் நேற்றுப் பிணை வழங்கியுள்ளது.

2019ஆம் ஆண்டு முதலாம் மாதம் 5 ஆம் திகதி புளியங்குளம் பொலிஸாரால் கிளைமோர் குண்டை

☞ 9

Since 2014

அருந்ததி

இணைய திருமண சேவை

28.02.2022 வரை இலவசப்பதிவுகளை மேற்கொள்ளமுடியும்

+94777164524

www.arunthathee.com

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை

20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## கிழக்கின் பிரதம செயலாளராக மீண்டும் துசித்த பி. வனிகசிங்க



கிழக்கு மாகாண பிரதம செயலாளராக, துசித்த பி. வனிகசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமிருந்து அவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

☞ 2

### விசேட அதிரடிப்படை வரணிப் பகுதியில் சூடு

### தாக்குதலில் 2பேர் காயம்



யாழ்ப்பாணம் -தென்மராட்சி, வரணி

☞ 9

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)
தடுப்புக் காவலில் வாடிய மனித உரிமைகள் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குப் பிணை அனுமதித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க உத்தரவு பற்றியது.

மற்றது – யாழ்.பல்கலைக்கழக மாணவர் மன்றப் பிரதிநிதிகள் இருவருக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் பற்றியது.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லா தொடர்பான வழக்கு கடந்த வெள்ளியன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டது. ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்க முடியாது என புத்தளம் மேல்நீதிமன்றம் வழங்கிய உத்தரவை மீளாய்வு செய்தது மேன்முறையீட்டு நீதிமன்று.

இரண்டு நீதியரசர்கள் கொண்ட ஆயத்தில் இந்த மீளாய்வு மனு விசாரிக்கப்பட்டது. ஒருவர் – நீதியரசர் மேனகா விஜேசுந்தர. மற்றவர் – நீதியரசர் நெய்ல் இடவல. இதில் நெய்ல் இடவல வழங்கிய பிணை அனுமதிக் கட்டளைக்குத் தாமும் இணங்குகின்றார் என்று நீதியரசர் மேனகா விஜேசுந்தர உத்தரவில் ஒப்பமிட்டிருக்கின்றார்.

இந்தப் பிணை அனுமதி உத்தரவை வழங்கிய நீதியரசர் நெய்ல் இடவல ஒரு முக்கிய பிரமுகர். முன்னர் மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்த அவர், நல்லாட்சி அரசின் காலத்தில் நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகமாகப் பணியாற்றியவர். அது மட்டுமல்ல, நல்லாட்சி அரசின் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி முன்னெடுக்கப்பட்டதல்லவா? அப்போது முழு நாடாளுமன்றமுமே அரசமைப்பு கவுன்ஸிலாக மாறிச் செயற்பட்டது. அந்த அரசமைப்புக் கவுன்ஸில் புதிய அரசமைப்பு நகலைத் தயாரிக்கும் பணியை முன்னெடுப்பதற்காகக் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட வழிகாட்டல் குழு ஒன்றை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைத்ததும், அந்த வழிகாட்டல் குழு மொத்தம் 84 தடவைகள் கூடி நகல் யாப்புக்கான ஒரு யோசனைத் திட்டத்தை தயாரானதும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். அப்படி 84 தடவைகள் கூடிய வழிகாட்டல் குழுவின் செயலாளராகப் பணியாற்றியவர்தான் இப்போது நீதியரசராக இருக்கும் நெய்ல் இடவல. நாடாளுமன்ற உதவி செயலாளர் நாயகம் பதவியில் இருந்து மீண்டும் நீதிச் சேவையில், மேன்முறையீட்டு நீதியரசர் பதவிக்கு வந்து விட்டார்.

ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை வழங்கும் தமது உத்தரவில் தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தொடர்பில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் மிக முக்கியமானவை. அதன் சாரத்தை சுருக்கமாகத் தருகிறேன்.

"வன்முறையால் அரசைத் தூக்கி எறியும் முயற்சி எடுக்கப்பட்ட காலகட்டத்தில் அதை எதிர்கொள்வதற்காகத் தற்காலிக ஏற்பாடாகவே இச்சட்டம் வந்தது. சரித்திரக் கட்டாயமாக அப்படி ஒரு தேவை அப்போது இருந்தது உண்மைதான். இந்த நான்கு தசாப்தங்களின் பின்னர் நிலைமை தலைகீழாகி விட்டது. அந்தச் சட்டத்தின் பிரயோகம் மற்றும் நடைமுறையாக்கத்தில் ஒரு பெரும் துஷ்பிரயோகம் தொடர்ச்சியாக ஒரு சுற்றாகவே தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது. என்ன காரணத்துக்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கத்தையே இந்தப் போக்கு இல்லாமலாக்குகின்றது. எதைத் தடுப்பதற்காக அந்தச் சட்டம் வந்ததோ அதனை அந்தச் சட்டமே முன்னெடுக்கும் நிலைமை இருப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அடக்கு முறையான வகையில் இந்தச் சட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதால் தனி மனித சுதந்திரத்துக்கு சவால் விடும் நிலைமை ஏற்பட்டுள்ளது. அது, இந்தச் சட்டம் என்ன நோக்கத்துக்குக் கொண்டு வரப்பட்டதோ, அதற்கு தலைகீழான போக்கிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்ற கருத்தைத் தந்துள்ளது.

"இந்தப் பின்புலத்தில் இந்தச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு நிறைவேற்றதிகாரத் தரப்பு வந்திருக்கின்றது. அதன்படி, இந்தச் சட்டம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்ற ஒரு முடிவு உள்ளது. அதைச் செய்ய வேண்டியது சட்டமாக்கும் துறையான நாடாளுமன்றம்தான். ஆனாலும் அது நடைபெறும் வரையில் இவ்விடயத்தில் நீதித்துறைக்கும் சில பொறுப்புகள் உண்டு. இக்கால கட்டத்தில் இந்தச் சட்டத்தை வியாக்கியானம் செய்யும் போது இயற்கை நீதி நிலைநாட்டப்படுவதை இயன்ற வரை உறுதிப்படுத்துவதில் நீதித்துறைவிசேட கவனம்செலுத்த வேண்டும். அந்த அடிப்படையில் இந்தச் சட்டத்தை வியாக்கியானம் செய்து இந்தப் பிணை அனுமதியை வழங்குகின்றோம்."

– இதுதான் நீதியரசர் நெய்ல் இடவலவின் பிணை அனுமதி உத்தரவின் சாரம்.

நீதித்துறையினர் அரசியல் பேசக் கூடாது. ஆனாலும் இயற்கை நீதியின் அடிப்படையில் கத்தியில் நடப்பது போல நாசூக்காக விடயங்களை தமது உத்தரவில் சுட்டியிருக்கின்றார் அவர்.

மீளாய்வு விவகாரங்களில் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இருக்கும் பரந்த நியாயாதிக்கத்தை அவர் தமது சட்ட வியாக்கியானத்துக்கு ஆதாரமாகப் பற்றி நிற்பதும் குறிப்பிடத்தக்கது.

சில இடங்களில் இச்சட்டத்தை Draconian (கொடூரமான) சட்டம் என்று கோடி காட்டவும் அவர் தவறவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் நடைமுறையாக்கம் சர்வதேச ரீதியிலான சர்ச்சையாகியிருக்கும் இச்சமயத்தில் இந்த நீதிமன்ற உத்தரவும் அதன் வாசகங்களும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. அதனால் அவற்றை வாசகர்களுக்குத் தந்தேன்.

அடுத்தது – யாழ்.பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் தொடர்பான வழக்கு. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் மாணவர் அவையின் யாழ்.பல்கலைக்கழக அலுவலகத்துக்குள் புகுந்து தேடுதல் நடத்திய படையினர் உள்ளே பிரபாகரனின் முகத் தோற்றம் தீட்டப்பட்ட ஓவியம் ஒன்று இருந்தமையை அடுத்து, அப்போதைய மாணவர் அவைத் தலைவரையும் செயலாளரையும் கைது செய்தமையும், பின்னர் சட்டத்தரணி சுமந்திரனின் தலையீட்டின் அடிப்படையில் அப்போதைய சட்டமா அதிபர், அவர்களைப் பிணையில் செல்வதற்கு ஆட்சேபிக்காமல் இருப்பதற்கு இணங்கியமையும், அதனடிப்படையில் அவர்கள் பிணையில் விடப்பட்டமையும் தெரிந்தவையே.

இரண்டு, மூன்று வருடங்கள் இருந்து விட்டு இப்போது திடீரென அவர்களுக்கு எதிராகத் தனித்தனி இரு வழக்குகளைத் தொடுத்திருக்கின்றது சட்டமா அதிபர் திணைக்களம். கொழும்பில் வெவ்வேறு மேல் நீதிமன்றங்களில் வெவ்வேறு குற்றப்பத்திரங்கள்.

மாணவர் அவை செயலாளருக்கு எதிரான வழக்கு ஜனவரி 7ஆம் திகதி ஒரு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி நிரான் அங்கிட்டலும் –

தலைவருக்கு எதிரான வழக்கு ஜனவரி 31ஆம் திகதி வேறு ஒரு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சுமந்திரன் தாமே நேரிலும் –

முன்னிலையாகி வாதிட்டு, குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்ட இருவருக்கும் பிணை பெற்றுக் கொடுத்தனர்.

சுமந்திரனின் கோரிக்கையின் பேரில் இரண்டு வழக்கையும் பெப்ரவரி 14ஆம் திகதி ஒரே மேல் நீதிமன்றத்தில் மீள எடுப்பதற்கு திகதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோர் அச்சமயம் யாழ்.மாவட்ட எம்.பி. சுமந்திரனுடன் யாழ்.சட்ட நிலைமை குறித்து பேச்சுகளில் ஈடுபட்டனர். அப்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாங்கள் புது வழக்குகளைத் தாக்கல் செய்வதில்லை என்று பேராசிரியர் பீரிஸ் கூறியபோது, அதை மறுத்துரைத்த சுமந்திரன், மேற்படி பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் வழக்குகளும் புதிதாகத் தொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டினார். பேராசிரியர் பீரிஸ் நீதி அமைச்சரைப் பார்த்தார்.

"நான் கொழும்பு சென்றதும் இந்த வழக்கு விடயங்களைத் தாருங்கள். பார்த்துச் சொல்லுகிறேன்." – என்றார் நீதி அமைச்சர் அலி சப்ரி.

தான் கொழும்பு சென்றதும் அவரே சுமந்திரனுடன் தொடர்பு கொண்டு வழக்கு விடயங்களைப் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர், நேற்று நாடாளுமன்றத்தில் நாடாளுமன்ற அலுவல்கள் குழுவின் கூட்டத்தில் பங்கு பற்றுவதற்கு வந்திருந்த சுமந்திரனுடன் நீதி அமைச்சர் சப்ரி உரையாடினார்.

அந்த வழக்குகள் (பல்கலைக்கழக மாணவர்கள் சம்பந்தமானவை) மீண்டும் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது விடயங்களை விளக்கி புதிய விண்ணப்பம் ஒன்றைச் செய்யுங்கள். சட்டமா அதிபர் உரிய நடவடிக்கையை நீதிமன்றத்தில் பிரதிபலிப்பார்." – என்று கூறியிருக்கின்றார் நீதி அமைச்சர் என அறிய வந்தது.

நல்லது. பெப்ரவரி 14ஆம் திகதி மேற்படி இரு மாணவ பிரதிநிதிகளுக்கும் எதிரான வழக்குகள் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது சட்டமா அதிபர் குற்றப் படுத்திரங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, வழக்கை முடிவுறுத்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படி நடந்தால் அந்த அப்பாவி மாணவப் பிரதிநிதிகளின் இந்த அவலம் – நெருக்கடி – முடிவுக்கு வரும். அப்படி நடக்க வேண்டும் என எல்லோரும் பிரார்த்தித்துக் கொள்வோம். அவ்வளவு தான், எங்கள் கையில் உள்ளது.

– மின்னல் –

# நேற்றும் 1,298 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் மேலும் 1,298 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 20 ஆயிரத்து 732 ஆக அதிகரித்துள்ளது.

# மண்மேடு சரிந்து விழுந்து மூவர் பரிதாப உயிரிழப்பு!



கண்டி, வத்துகாமம் – மடவளை பகுதியில் நேற்றுப் பிற்பகல் ஏற்பட்ட மண் சரிவில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மற்றுமொருவர் சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் பன்வில, பூஜாபிட்டிய, கெடபுலாவ ஆகிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

புதிதாக கட்டப்படும் வீட்டின் அருகே, பாதுகாப்புச் சுவர் கட்டுவதற்காக குழி தோண்டிக் கொண்டிருந்தபோது மேலே இருந்த மண்மேடு இடிந்து விழுந்துள்ளது.

அந்த இடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த நால்வர், குறித்த மண்மேட்டு சரிவில் சிக்கியுள்ளனர் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்த நபர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமையுடன் சம்பவம் தொடர்பில் வத்துகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கிழக்கின் பிரதம...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான துசித்த பி. வனிகசிங்க, கேகாலை மற்றும் அம்பாறை மாவட்டங்களின் செயலாளராகக் கடமையாற்றியுள்ளமையுடன், அரச நிறுவனங்கள் பலவற்றிலும் பல்வேறு பதவி நிலைகளை வகித்தவராவார்.

2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், கிழக்கு மாகாண பிரதம செயலாளராக அவர் பதவியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# எரிபொருள் விலை உயர்வு மக்கள்மீது மற்றொரு சுமை!

## என்கின்றார் காவிந்த எம்.பி.



தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் எரிபொருள் விலையை 30 வீதத்தால் அதிகரித்துள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன இதனைக் கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலப் பகுதியில் 137 ரூபாயாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் விலை தற்போது 184 ஆக உயர்ந்துள்ளது என சுட்டிக்காட்டினார்.

மேலும் பெற்றோல் விலை அதிகரிப்புடன், ஓட்டோ கட்டணங்கள் அதிகரிக்கவும் டீசல் விலை அதிகரிப்பு மீனவர்களை நேரடியாகப் பாதித்துள்ளது என்றும் தெரிவித்தார்.

ஆட்சிக்குவந்து சில வாரங்களுக்குள் விலைவாசியை மீண்டும் ஒருமுறை உயர்த்துவதற்கு அரசாங்கம் அனுமதித்துள்ளதோடு மக்களுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

வெளிநாட்டு கையிருப்பு 60 கோடி டொலர்கள் மட்டுமே இருப்பதாகவும் இது நாட்டுக்கு இரண்டு மாதங்களுக்கான எரிபொருளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும் என்றும் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

நாட்டின் நிதி நிலை தொடர்பாக அரசாங்கம் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்பது சில அமைச்சர்களின் கருத்துக்களில் புலனாகிறது என்றும் எனவே அன்னிய கையிருப்பு தொடர்பானதரவுகளை அரசாங்கம் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.

தற்போது 47 ஆயிரம் மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு சுமார் 2 ஆயிரம் கப்பல்கள் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளன என காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

# ஹெரோயின் போதை பொருளுடன் வியாபாரி காத்தான்குடியில் கைது

காத்தான்குடியில் போதைப் பொருள் வியாபாரி ஒருவரை 5 அரை கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று (திங்கட்கிழமை) காலையில் காத்தான்குடி பகுதியில் வைத்து கைது செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றைடுத்து நேற்று காலையில் பொலிஸார் காத்தான்குடி மீன்பிடி த் திணைக்கள வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது மேற்படி நபரை மடக்கிப்பிடித்து கைது செய்யததுடன் அவரிடமிருந்து 5 அரை கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# பரீட்சைக்குத் தோற்றும் சிறைச்சாலை கைதிகள்

நாடளாவிய ரீதியில் நேற்றைய தினம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில், வெலிக்கடை சிறைச்சாலையின் கைதிகள் இருவர் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கைதிகள் இருவரும் 43 மற்றும் 46 வயதுடையவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மெகசின் சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தில் இவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்போகம் பாரிய வீழ்ச்சி

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை விளைச்சல் பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கால போக பயிர்ச்செய்கைகளுக்குரிய இரசாயன உரமின்மை மற்றும் களை நாசினி, கிருமி நாசினி என்பவற்றின் விலையேற்றம் காரணமாக அவற்றைத் தாம் வாங்கி பயன்படுத்த முடியாத நிலையில் இம்முறை தமது பெரும்போக நெற்செய்கையின் விளைச்சலில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் தற்போது எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் அறுவடை இயந்திரக்கூலி முன்பைவிட அதிகரித்துள்ளதாகவும் விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் விவசாயிகள் பலத்த இன்னல்களுக்கு மத்தியில் பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாகப் பயன்படுத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரிப்பு வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறை!

## வைத்தியர் ஹேமந்த ஹேரத் சுட்டிக்காட்டு

இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் திடீர் எழுச்சி காரணமாக வைத்தியசாலைகளில் இடவசதி மற்றும் படுக்கைகள் இல்லாமல் இயங்குகின்றன என பொதுச் சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு வாரங்களாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, அந்த எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது என்று அவர் நேற்று (திங்கட்கிழமை) ஊடகமொன்றுக்குக் கூறினார்.

ஏனைய நோயாளிகளுக்கு ஏற்படும் அசௌகரியத்தைத் தவிர்ப்பதற்காக, கொரோனா நோயாளிகளுக்காக 6 ஆயிரம் படுக்கைகள் பயன்பாட்டில் உள்ளன என்றும் 14 ஆயிரம் படுக்கைகள் தயார்நிலையில் வைப்பத்கான ஏற்பாடுகளை வைத்தியசாலைகள் தொடர்ந்து செய்து வருகின்றன எனவும் ஹேரத் குறிப்பிட்டார்.




கொரோனா நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 70 படுக்கைகளில், தற்போது 59 படுக்கைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன என்றும் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

# வடகொரியாவிடம் இருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கியதாகக் கூறிய பஸில் பதவி விலக வேண்டும்



கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை இலங்கை வாங்கியதாகக் கூறிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

உள்நாட்டுப் போர் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, கறுப்புச் சந்தையில் கிடைத்த பணத்தைப் பயன்படுத்தி, வடகொரியாவிடம் இருந்து இலங்கை ஆயுதங்களை வாங்கியதாக பஸில் ராஜபக்ஷ கூறினார் என ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

வெளிவிவகார அமைச்சு பின்னர் ஊடக அறிக்கையை நிராகரித்தது. ஆனால் நிதியமைச்சரால் எந்த மறுப்பும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையிலேயே, பஸில் ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று (திங்கட்கிழமை) செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கறுப்புப் பணத்தை எவரும் பயன்படுத்துவதற்கு எமது சட்டங்களில் இடமில்லை என்றும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தால் தடைகள் விதிக்கப்பட்ட ஒரு நாட்டைக் கையாள்வதற்கான ஆணையை பொதுமக்கள் அரசாங்கத்துக்கு வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பெரும் சட்டக் கருந்துளை!

**மிகக் கொடூரமான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை ராஜபக்ஷ அரசு மிலேச்சத்தனமாகப் பயன்படுத்தி வருவதாகத் தெரிவித்து காட்டமான அறிக்கை ஒன்றை பிரஸல்ஸிலிருந்து வெளியிட்டிருக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.**

**'சட்டக் கருந்துளையில்'; பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சீர்திருத்துவதில் இலங்கை தோல்வி – என்ற தலைப்பில், 59 பக்கத்தில் விரிவான அறிக்கை ஒன்றை அந்த அமைப்பு நேற்று வெளியிட்டிருக்கின்றது.**

**இந்த விரிவான அறிக்கை வெளியிடப்பட்டமை தொடர்பில், அதன் சாரமாக 'மதிப்பிழந்த சட்டத்தின் கீழ் மிகக் கொடூரமான துஷ்பிரயோகங்கள்; பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை ரத்துச் செய்ய ஐரோப்பிய ஒன்றியம் அழுத்தம் கொடுக்க வேண்டும்' – என்ற ஊடக அறிக்கை ஒன்றையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் நேற்று வெளியிட்டது.**

**மதிப்பிழந்து போய் விட்ட இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி நீண்ட காலத் தடுப்புகள் மற்றும் சித்திரவதைக் கொடூரங்களைத் தொடரும் கொழும்பு அரசுடன் வர்த்தகப் பங்குதாரர்களாக இருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நன்கொடை வழங்கும் நாடுகள் போன்றவை, மேற்படி கொடூரச் சட்டத்தை இலங்கை இரத்துச் செய்வதற்குக் காலக் கெடுவுடனான செயற்பாட்டுக்கு அழுத்தம் கொடுப்பதுடன், மேற்படி சட்டத்தின் சீர்திருத்தம் என்ற பெயரில் கொழும்பு அரசு, முன்வைத்திருக்கும் பாசாங்குத் திட்டத்தை அடியோடு நிராகரிக்கவும் வேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுத்தியிருக்கின்றது.**

**தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையினருக்கு எதிராக இழிவான இந்தச் சட்டத்தை கோட்டாபய ராஜபக்ஷ அரசு பிரயோகித்து வருவதாகக் குற்றம் சுமத்தும் அந்த அமைப்பின் தெற்காசிய இயக்குநர் மீனாட்சி கங்குலி, இந்தச் சட்டத்தைச் சீர்திருத்துவதாகக் காட்டும் ராஜபக்ஷ அரசின் நடிப்புக்கு எடுபடாமல், அந்தச் சட்டத்தின் முழுமையான விலக்கலுக்கு ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ தேசங்களும் பிற நாடுகளும் வலியுறுத்த வேண்டும் என்றும் கோருகின்றார்.**

**சாதாரண பிரஜை ஒருவருக்கு உரிய அடிப்படை சட்ட உரிமைகளை மறுத்து, சட்டப் பாதுகாப்பை விலக்கி, சித்திரவதைக்கு உள்ளாக்கப்படவும், ஒன்றரை வருடங்களுக்கு மேல் தடுப்புக் காவலில் வாடவும், முறையான விசாரணை வசதிகளின்றியே பல வருடங்கள் சிறைக்குள் முடங்கவும் வழி செய்யும் இந்தச் சட்டத்தை 'பெரும் சட்டக் கருந்துளை'** (Legal Black Hole) **என்று மிகச் சரியாகவே குறியீட்டு முறையில் பெயரிட்டிருக்கின்றது மனித உரிமைகள் கண்காணிப்பகம்.**

**இந்தச் சட்டத்தை மாற்றியமைப்பதாக முன்னைய இலங்கை அரசு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் அளித்த வாக்குறுதியை நிராகரித்துச் செயற்படும் தற்போதைய கோட்டாபய ராஜபக்ஷ அரசு, அந்தச் சட்டத்தைத் தொடர்ந்து தனது கீழ்தரமான இலக்குகளுக்கும், நோக்குகளுக்குமாக குறி வைத்து ஏவிவிடும் கைங்கரியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றது.**

**1980 களில் தொடங்கி 2009 இல் யுத்தம் முடியும் வரை விடுதலைப் புலிகளுக்கும் அவர்களின் ஆதரவாளர்களுக்கும் எதிராக ஏவி விடப்பட்ட இந்தச் சட்டம், 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் மற்றொரு சிறுபான்மையினரான முஸ்லிம்களுக்கு எதிராகவும் கட்டவிழ்ந்துள்ளமையை அந்த அமைப்பு சுட்டுகின்றது.**

**கடந்த மூன்று வருடங்களில் இந்தச் சட்டத்தின் கீழ் அறுநூறு பேர் வரைக் கைது செய்யப்பட்டிருக்கின்றமையை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டி அந்த அமைப்பு அம்பலப்படுத்தியுள்ளது.**

**அந்தச் சட்டத்தின் கீழ் அண்மைக் காலத்தில் கைது செய்யப்பட்டோரும் மோசமான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமையை அத்தகைய நபர்களின் கூற்று ஆதாரத்தோடு முன்வைக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐரோப்பிய யூனியன் நாடுகள், அமெரிக்கா, பிரிட்டன் போன்றவை இலங்கை அரசு மனித உரிமைகளைப் பேணும் தனது கடப்பாட்டை நியாயமான முறையில் நிறைவு செய்யும் விதத்தில் அழுத்தம் தர வேண்டும் என்று கோருகின்றது. அது செயலில் நடக்குமா? சாத்தியங்கள் ரொம்பக் குறைவே!**

# மைத்திரி, சஜித், அநுர, சம்பிக்க, ரணில் எவரும் எமக்கு சவாலானவர்கள் அல்லர்!

## மஹிந்தானந்த சுயதம்பட்டம்



ஜனாதிபதிபதி தேர்தலில் மைத்திரி, சஜித், அநுர, சம்பிக்க,ரணில் ஆகியோர் எமக்கு பெரும் சவால் அல்ல என விவசயாத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி பகுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில தெரிவித்தவை வருமாறு -

கொவிட் - 19 வைரஸ் தொற்று பரவலை கருத்திற்கொண்டு கடந்த இரண்டு வருடகாலமாக செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் இருந்து விலகியிருந்தோம்.

கிடைத்த சந்தர்ப்பத்தை எதிர்தரப்பினர் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள்.

சுபீட்சமான எதிர்கால கொள்கை திட்டத்தின் ஊடாக நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முழுமைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் இடம்பெறும் காலம் வரை மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் கட்டம் கட்டமாக செயற்படுத்தப்பட்டுள்ளது.

சாதாரண தரபரீட்சையில் தோல்வியடைந்த ஒரு லட்சம் இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்டதுடன்,ஒரு லட்சம் கிலோமீற்றர் வீதி அபிவிருத்தி செயற்திட்ட பணிகள் செயற்படுத்தப்பட்டன.

கொவிட் தடுப்பூசி செலுத்தும் செயற்திட்டம் சிறந்த முறையில் வெற்றிப் பெற்றுள்ளது. நாட்டு மக்கள் உயிர்வாழ்வதற்கான சூழலை ஜனாதிபதி ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொவிட் வைரஸ் தொற்றுப்பரவல் ஏற்பட்டிருந்தால் நாட்டையும்,நாட்டு மக்களையும் கடவுள் காப்பாற்றியிருக்க வேண்டும்.

கொவிட் தாக்கத்தால் அதிக மரணங்கள் பதிவாகிய நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பிடித்திருக்கும். மைத்திரி, ரணில் முரண்பாட்டிற்கு நாட்டு மக்கள் பலியாகியிருப்பார்கள்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திஸாநாயக்க,மைத்திரிபால சிறிசேன, பாட்டலி சம்பிக்க, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிடவுள்ளார்கள்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இவர்கள் ஒரு சவால் அல்லர்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் பொதுஜன பெரமுனவே வெற்றிப் பெறும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவார். - என்றார்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தாதியர்கள், வைத்தியர் பணிப்புறக்கணிப்பு





யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் தாதியர்கள் மற்றும் வைத்தியர்கள் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போது 3 ஆயிரம் ரூபாவாக உள்ள விசேட கடமைக் கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்துதல், ஆசிரியர் சேவை சம்பள உயர்வின் மூலம் தாதிய சேவைக்கு ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், தொழில் வல்லுநர் பட்டதாரிகளுக்கு திருத்தியமைத்த சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயத்துடன் தகுந்த பதவி வாய்ப்புக்களைக் கிடைக்கச் செய்தல், உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் குறித்த பணிப்புறக் கணிப்பு போராட்டம் காரணமாக யாழ், போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் சேவை என்பனவற்றின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

குறித்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தாண்டுக்கு முன்னர் அம்பாந்தோட்டையில் புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும்!

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ திட்டவட்டம்



சுயதொழில் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும் என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சுற்றி, சீமெந்து மற்றும் உருக்கு உற்பத்தி உட்பட பத்து புதிய கைத்தொழில் தொழிற்சாலைகளைத் திறக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# வெறும் சொல்லாட்சியாக கடந்த கால நல்லாட்சி!

## அமைச்சர் வியாழேந்திரன் சாடல்





எந்தவித பிரச்சினையும் இல்லாத சுமுகமான சூழ்நிலையில் நாட்டு மக்களின் விடயங்களை நிறைவேற்றாமல் வெறும் சொல்லாட்சியாகவே கடந்தகால நல்லாட்சி நடைபெற்றது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் மாநாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு -பெரியபோரதீவில் நடைபெற்றது.

இதன்போது கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்மேலும்தெரிவித்தவை வருமாறு -

வேலையற்ற பட்டதாரிகள் வீதியோரங்களில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டார்கள், மாவட்டத்திலே உள்ள 410 குளங்களில் 90 சதவீதமான குளங்கள் புணரமைக்கப்படவில்லை. பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு அடிக்கற்கள் மாத்திரம்தான் நடப்பட்டன எதுவும் நடைபெறவில்லை.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில், எதுவித வீதிக ;கட்டுமானங்கள், பாலங்கள், எவையும் நடைபெற்றிருக்கவில்லை. தங்போதைய பிரதமர் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தான் மண்முனைப் பாலம், கல்லடிப்பாலம் மற்றும் வடக்கின் வசந்தம், கிழக்கின் உதயம் திட்டங்கள் அனைத்தும்முன்னெடுக்கப்பட்டிருந்தன. எனவே, கடந்த நல்லாட்சியைப் பாதுகாத்தது தமிழ் தலைமைகளுக்கும் பாரிய பங்கு உள்ளது.

தமிழ் மக்களது நீண்டகால மற்றும் குறுகிய காலப் பிரச்சினைகளுக்கும் கடந்த கால அரசாங்கத்தால் தீர்வு வழங்கப்படவில்லை. அபிவிருத்திகளும், மேற்கொள்ளப்படவில்லை. இவ்வாறு இருந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அப்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தைப் பாதுகாத்திருந்தது.

தற்போது ரணில் விக்கிரமசிங்க மாத்திரம் தேசியப்பட்டியல் ஊடாகவும், 22 உறுப்பினர்களாக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆகக் குறைந்து தற்போது 10 பேர் மாத்திரம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

எமது அரசாங்கம் தற்போது 60 ஆயிரம் பட்டதாரிகளுக்குத் தொழில் வழங்கியுள்ளது.

அதில் மட்டக்களப்பில் மாத்திரம் 2 ஆயிரத்து 147 பேருக்குக் கிடைத்துள்ளது. அதில் 70 சதவீத மானவர்கள் பெண்கள், ஒரு லட்சம் கிராமிய வீதிகள் அடிப்படையில் பல பில்லியன் மதிப்பீட்டிலான வீதிகள் புனரமைக்கப்பட்டு வரப்படுகின்றன.

கடந்த வருடம், 88 குளங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வாரி சௌபாக்கியா திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ளன. அதுபோல் இந்த வருடம் 100 குளங்களைப் புனரமைக்கத் திட்டமிட்டுள்ளோம்.

அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் தேசிய பாடசாலைகளைத் தரமுயர்த்தியுள்ளோம். அரசியல் அதிகாரம் கடந்த காலங்களில் எமது கரங்களில் இருக்கவில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியிலுள்ள மக்கள் சரியாகச் சிந்தித்திருந்தால் ஆளும் கட்சியில் இன்னுமொருவரை நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்திருக்கலாம். இதுபற்றி நாம் எதிர்காலத்தில் சிந்திக்க வேண்டும்.

இயற்கைப் பசளையை இவ்வருடம் விவசாயிகள் பயன்படுத்தியதால் அறக்கொட்டி இம்முறை இல்லாமல் போயுள்ளது, புற்களின் தாக்கங்கள் குறைந்துள்ளன. அதாவது ஓர் ஏக்கருக்கு, 10 மூடைதான் விளைந்துள்ளது. ஆனால் விளைச்சல் குறைந்துள்ளது.

ஆனால் ஒரு மூடை நெல் 6 ஆயிரம் ரூபா வரை உயர்ந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் மக்களுக்கு எதுவும் செய்யாமல் இருப்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுகின்றார்கள். அநேகமாக மக்களுக்குச் சேவை செய்பவர்கள் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்படுகின்றார்கள்.

வெறும்பேச்சை மாத்திரம் வைத்துக்கொண்டு அவர்கள் காலா காலத்துக்கு மக்கள் பிரதிநிதிகளாக வந்துவிடுகின்றார்கள். அனைவராலும் பேசமுடியும், அதற்கப்பால் நடைமுறைச் சாத்தியமான விடயங்கள் கஷ்டமானதாகும். எதிர்க்கட்சி உறுப்பினராகப் பயணம் செய்வது இலகுவான விடயமாகும். ஆனால் ஆளும் கட்சியில் இருந்துகொண்டு வேலை செய்வதென்பது கடினமான விடயமாகும் என அவர் இதன்போது தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட மகளிர் அணி தலைவி ச.காந்தரூபி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் மட்டக்கப்பு மாவட்ட அமைப்பாளர் பரமசிவம் சந்திரகுமார், அந்தக் கட்சியின் தலைமைக் காரியாலயத்திலுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய மகளின் ஒருங்கிணைப்பாளர் பாதிமா சிஹானா, உதவி ஒருங்கிணைப்பாளர் சிதம்பரம் லோஹிஷ்வரி மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து வருகைதந்த பெண்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கதாகும்.

# இனங்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்படும்போது அதிகாரிகள் நடுநிலையாகச் செயற்பட வேண்டும்!

## இம்ரான் மக்ரூப் எம்.பி. கோரிக்கை



இனங்களுக்கிடையேயான மனக் கசப்புகள் ஏற்படும் போது கல்வி அதிகாரிகள் சிந்தித்து நடுநிலையாகச் செயற்பட வேண்டும் எனவும் மாறாக அவர்கள் பிரச்சினையைத் தூண்டுபவர்களாக இருக்கக் கூடாது என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மக்ரூப் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சண்முகா பாடசாலையில் அபாயா அணிந்து சென்ற ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்த சம்பவம் இன்று நாடாளாவியரீதியில் பேசுபொருளாக உள்ளது. இதனால் தமிழ் - முஸ்லிம் உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது.

ஓர் அரச பாடசாலையில் கல்வி உயர் அதிகாரிகளின் பணிப்புரைக்கமைய கடமையேற்க சென்ற ஆசிரியையை கடமையேற்க விடாது தடுத்து நிறுத்தியமை சட்டத்துக்குப் புறம்பான செயலாகும்.

இது தொடர்பாக நீதியான விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். இந்நிலையில் இந்தப் பிரச்சினையைத் தணிக்க வேண்டிய மாகாணக் கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாள ரும் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல் செயற்படுகின்றமை மிகவும் கவலையைத் தருகின்றது.

இந்த சம்பவத்தில் பாதிக்கப்பட்ட ஆசிரியையை உடடியாக வலயக் கல்வி அலுவலகத்துக்கு இணைக்கும் கடிதத்தை வலயக் கல்விப் பணிப்பாளரும், மாகாணக் கல்விப் பணிப்பாளரும் வழங்கியுள்ளனர்.

ஓர் ஆசிரியையை வலயக் கல்வி அலுவலகத்துக்கு இணைப்பதன் நோக்கம் என்ன? அதற்கான நிர்வாக ஏற்பாடுகள் ஏதும் உள்ளனவா? அவருக்கு என்ன கடமையை அங்கு வழங்க முடியும்.

வலயக் கல்வி அலுவலகத்தில் அவருக்கான கடமை இல்லை என்றால் அவர் காலை முதல் மாலை 4.15 மணி வரை அலுவலகத்தில் என்ன செய்ய முடியும்? என்று யோசித்தல்லவா முடிவெடுக்க வேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளரும், வலயக் கல்விப் பணிப்பாளரும் இந்தக் கேள்விகளுக்கு என்ன பதில் சொல்லப் போகின்றார்கள்.

தற்போது நாட்டிலுள்ள சகல பாடசாலைகளும் விடுமுறை. இதனால் ஆசிரியர்களுக்கும் விடுமுறை. ஆனால் இந்த ஆசிரியையை வலயக் கல்வி அலுவலகத்துக்கு இணைத்து தினமும் அலுவலகத்துக்கு வர வைப்பது அவரைத் தண்டிப்பது போன்ற செயலாகும்.

இது தற்போதைய பிரச்சினையைக் குறைப்பதற்குப் பதிலாக மேலும் தூண்டி விடும் செயலாகும்.

இது தொடர்பாக எனது ஆட்சேபனை யைத் தெரிவிக்க மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் பல தடவை தொடர்பு கொண்ட போதும் அவர் எனது தொலைபேசி அழைப்புக்கு பதில் தரவில்லை.

வலயக்கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு எனது ஆட்சேபனையைத்தெரிவித்துள்ளதோடு உடனடியாக ஆசிரியையின் விருப்பத்துடன் பாடசாலை ஒன்றுக்கு அவரை இணைப்புச் செய்யுமாறு அறிவித்துள்ளேன்.

இதனைக் கவனத்தில் எடுப்பதாக எனக்கு அவர் அறிவித்துள்ளார். என்னைப் போன்ற சில அரசியல் வாதிகள் சமுக ஒற்றுமை தொடர்பில் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கல்வி அதிகாரிகள் நடுநிலையாகச் சிநத்தித்து செயற்பட வேண்டும். பிரச்சினையைப் பூதாகரமாக்கும் செயற்பாடுகளை அவர்கள் நிறுத்த வேண்டும் எனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.

### அம்பிகா தொடர்பான வெளிவிகார அமைச்சின் அறிக்கைக்கு

# 161 சமூக செயற்பாட்டாளர் 47 அமைப்புகள் கூட்டாக கண்டனம்

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உபகுழுவின் அமர்வில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதனால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு மறுப்பு தெரிவித்து, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு 161 சமூக செயற்பாட்டாளர்களும் , 47 அமைப்புக்களும் இணைந்து கண்டனம் வெளியிட்டுள்ளன. ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உபகுழுவின் அமர்வு கடந்த ஜனவரி மாதம் 27 ஆம் திகதி நிகழ் நிலையில் நடைபெற்ற நிலையில், அதில் இலங்கை யின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

அந்த அமர்வில் பங்கேற்று நாட்டின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பாகத் தெளிவுபடுத்திய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன், அண்மைய காலங்களில் மனித உரிமைகள் நிலைவரம் மிகமோசமடைந்து வருவதாகச் சுட்டிக்காட்டினார். அதுமாத்திரமன்றி ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அலுவலகத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆதாரங்களைத் திரட்டுவதற்கான பொறிமுறைக்கு ஐரோப்பிய ஒன்றிய உறுப்புநாடுகள் நிதியுதவி உள்ளிட்ட ஒத்துழைப்புக்களை வழங்கமுன்வரவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருந்தார்.

எனினும் அவரது கருத்துக்கள் உள்ளகப் பொறிமுறை மற்றும் உள்நாட்டுக்கட்டமைப்புக்களின் ஊடாக நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகிய-வற்றை உறுதிசெய்வது தொடர்பாகத் தாம் கொண்டிருக்கும் உறுதிப்பாடு தொடர்பில் சந்தேகங்களைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கைக்கு கண்டனம் தெரிவித்து 161 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் , 47 அமைப்புக்களும் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 274

**698.தர்மலிங்கத்தின் கொலை தமிழ் அரசியல் பரப்புக்கள் ஒற்றுமையாகவும், கூட்டுறவாகவும் விடுதலைக்காக இயங்குவதைப் பாதித்ததா?**

பாதித்ததா என்பதிலும் பார்க்க அதற்கு சாவு மணி அடித்தது எனச் சொல்வது பொருத்தம். விடுதலைப் போராளிகளின் அமைப்புக்கள் தமிழர் விடுதலை கூட்டணியினரை மிதவாதிகளாகக் கருதி,



பிரபா

அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்க வேண்டும் என இயங்கின. திம்பு பேச்சு வார்த்தைகளில் இருந்து அவர்கள் வெளியேறிய பின், ராஜீவ் காந்தி புது டில்லியில் அழைத்த கூட்டத்திற்கு, புளொட் அமைப்பையும் தமிழர் விடுதலை கூட்டணியினரையும் தவிர மற்றவர்கள் போகவில்லை. இதன் எதிரொலியாக அவர்களுக்குப் பாடம் படிப்பிப்பதற்கே நாட்டிலிருந்த கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறி வைக்கப்பட்டனர். தர்மலிங்கத்தையும், ஆலாலசுந்தரத்தையும் "போடச் சொன்ன" உத்தரவைப் பெற்றவர் அதனைச் செய்தார். மற்றவர்களுக்காக வந்த உத்தரவு விடயத்தில் அதனைச் செய்ய வேண்டியவர் சிறிது தயக்கம் காட்டியமையால் அந்த மற்றவர்கள் தப்பித்தார்கள்.

இதன் சமாந்தர காலங்களில் விடுதலை குழுக்களிலும் கூட, சித்தாந்தங்களின் அடிப்படையிலோ, தனிப்பட்ட வேறுபாடுகளினாலோ ஒற்றுமையும், கூட்டுறவும் குலைந்து, விடுதலைப் புலிகளிலிருந்து, உமா மகேஸ்வரனோடு சிலர் வெளியேறியிருந்தனர். 20 – 30 பேர் வரையிலாக வளர்ந்திருந்த விடுதலை புலிகள் கூட முக்கியமான இரண்டு குழுக்களாகப் பிரிந்திருந்தனர். அதன் பின் பாண்டி பஜாரில் உமா மகேஸ்வரனும், பிரபாகரனும் துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டு, அவர்களின் நாடுகடத்தலை, தமிழர் விடு



தலைக் கூட்டணி இந்திரா காந்தி மூலம் தடுத்து நிறுத்தியிருந்தது.

எவ்வளவு இணக்கப் பேச்சு வார்த்தைகளிலும் ஒற்றுமையாகவோ கூட்டுறவாகவோ இயங்க அவர்கள் தயாராகவில்லை. ஊர்மிளா சம்பந்தப்பட்ட விடயத்தில் உமாமகேஸ்வரன் இயக்க விதிகளை மீறினாரென்றும், விலகும் அல்லது விலக்கப்பட்ட உறுப்பினர் இன்னுமொரு இயக்கத்தை தொடங்குவது மரண தண்டனைக்குரிய குற்றம் என்பதால் உமா மகேஸ்வரன் முற்று முழுதாக இயக்க வேலைகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்பது பிரபாகரனது வாதம். ஆகவே ஒற்றுமையாக்கி, இணைப்பதற்கான பேச்சுக்கள் பயனற்று அவரவர் வேறாக இயங்குவதற்கான சமாதான நிலையை உண்டாக்குவதற்கான முயற்சிகள் தொடர்ந்தன.

இந்த முயற்சிகளின் பயனாக, உமா புளொட் அமைப்பை உருவாக்கினார் என்ற அபிப்பிராயமே பரவலாக உண்டு. அப்படியல்ல, அது பின்னாள் விடுதலை புலிகளுக்கிடையே ஏற்பட்ட, சிந்தனை வேறுபாடுகளினாலும் தனி மனித அதிகாரங்கள், அகங்காரங்களிலும் உருவானது. அதற்கு உமா தலைமை ஏற்றார்.

**699.அப்படியானது, எந்த சந்தர்ப்பங்களில் நடந்தது?**

அப்பொழுது விடுதலை புலிகள் இயக்கம் 50 முதல் 60 வரையான அர்ப்பணிப்புள்ள இளைஞர்களைக் கொண்டு வளர்ந்திருந்தது. அவர்களிடையே ஜனநாயகம் ஏற்பட வேண்டும் என்பதில் மிக அக்கறையோடு மனோ மாஸ்டர், அமகன், நங்



உமா

தன், மாத்தையா, சுந்தரம் போன்றோர் ஓர் இணையில் இருந்தார்கள். அவர்கள் விடுதலை புலிகள் அமைப்பினிடையே இந்த ஜனநாயக வழி, அமைக்கப்பட வேண்டும், அது முக்கியம் என்ற கருத்தை வலியுறுத்துவதற்கு மனோ மாஸ்டர் ஓரளவு அரசியல் அறிவு இருந்ததாலும் ரொஸ்கியக் கருத்துக்களை (Trotsky) விரும்பியதாலும் இப்படியான சிந்தனைகளில் ஆர்வம் காட்டினார். நந்தன் தமிழ் தேசிய விடுதலை முன்னணியில் (NLFT) இணைந்து செயற்பட்டு பின்னர் விடுதலைப் புலிகளுடன் இணைந்து பயணித்தவர். அவர்களில் சுந்தரம், பிரபாகரனை இயக்கத்தை விட்டு வெளியேற்றுவதே, அரசியல் ரீதியாக இயக்கத்தை முன்னேற்றுவதற்கான ஒரே வழி என்பதை வெளிப்படையாகவே முன்வைத்தவர்.

அந்த கருத்துடன் நந்தன் வலுவாக இணங்கிப் போனார். எல்லோரும் மக்கள் அமைப்புக்களை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்திலும் இருந்தார்கள். இவற்றினால், அழிவுகளைப் பலனாகத் தரக்கூடிய இராணுவ வழிமுறை ஒன்றுதான் என்பதற்கு பதிலாக மாற்று சிந்தனை போக்கு இயக்கத்தில் உருவாகி வளர்ந்தது. அதே சமயத்தில் மக்கள் அமைப்புகளை உருவாக்குவதை விட விடுதலைப் புலிகளின் தலைமையை மாற்றியமைத்தால் பல பிரச்சினைகள் தீரும் என்றும், பிரபாகரனின் சர்வாதிகாரப் போக்கில் ஒரு நிதானத்தையோ ஜனநாயகத்தையோ ஏற்படுத்தாமல் வளர்ச்சி அடைவது குறையென்றும் கருதப்பட்டது. ஆக புதிய வழிமுறை ஒன்றைத் தேடினார்கள்.

அரசியல் திசை என்பதில் அந்த நாள்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரைத் தங்களுக்குப் பலமாகவும், அவர்களின் நாடாளுமன்ற அரசியலின் வன்முறை வடிவமாகவே தாங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம் எனவும் இவர்கள் நம்பினார்கள்.

அவற்றில் சுந்தரத்தின் முன்னெடுப்பில் பிரபாகரனுக்கு எதிரானவர்கள் , பிரபாகரனுக்கு நிபந்தனையற்ற, ஆதரவு வழங்கியோர், அரசியல் வழிக்கு மக்கள் குழுவை அமைத்து ஜனநாயக ரீதியில் தனி அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல் என்று மூன்று கருத்தாக்கங்கள் உருவாகின. அதில் மத்திய குழுவிற்கு பதிலாக செயற்குழு ஒன்றைத் தெரிவு செய்வதும், அரசியல் தத்துவார்த்த பத்திரிகையை வெளியிடவும் பிரேரிக்கப்பட்டது.

ஆனால் உமா மகேஸ்வரனுடன் இருந்த வேறுபாடுகளினாலும், கசப்புணர்வுகளினாலும், பிரபாகரனது அதிகாரப் போக்குகளும் யாரையும் நம்பாமலிருப்பதும் அதிகரித்தது. இந்த அதிருப்திப் போக்குகளால், ஆதங்கப்பட்ட பாலசிங்கம் சென்னையிலிருந்து தனது மனைவி அடேலுடன் லண்டன் திரும்ப, பிரபாகரன், இவற்றை மற்றவர்களுடன் பேசி தீர்க்கவென நாட்டுக்குத் திரும்பி இப்படியாக கருத்தாக்கங்களை முன்வைத்தோருடன் பேசினாலும் வைக்கப்



தர்மர்

பட்ட கோரிக்கைகளுக்கு முழு மனத்துடன் உடன்படவில்லை. ஓர் ஒற்றுமையற்ற நிலையிலும் வெறுமையுடனும்



ஆலால்

Sri Lanka
M. Alalasundaram Mudaliar ex MP

செயற்குழுவை உருவாக்குதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அது உறுப்பினர்கள் எல்லோரையும் அழைத்து ஒருமனதாக அவருக்கு இருக்கும் ஆதரவு தளத்தில் செயற்குழுவிற்கு தேர்வு செய்வது என ஏற்கப்பட்டது. அப்படியாக, தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழுவினால் பிரபாகரன் இல்லாத தலைமை ஒன்று முதல் தடவையாக விடுதலை புலிகளை வழி நடத்தும் என்று எண்ணி அப்படியான செயற்குழு தேர்வு செய்யப்பட்டது. அந்த உற்சாகத்தில் தங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வழிமுறையாக பத்திரிகை ஒன்றை வெளியிடுவது எனவும் அதற்கு 'உணர்வு' என்று பெயரிடுவதாகவும் ஏறத்தாழ முடிவெடுத்தார்கள்.

செயற்குழுக் கூட்டத்திற்கு யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தவர்கள் யாவரும் தத்தமது இடங்களுக்கும் பண்ணைகளுக்கும் திரும்பி சென்றனர். பேசப்பட்டபடி சிலர் இயக்க வேலைகளுக்காவும், அரசியல் அறிவுகளுக்காகவும் இந்தியா திரும்ப இருந்தனர். ஆனால் நடந்த அங்கத்தவர் கூட்டத்தின் முடிவுகள் இரண்டு நாள்களுக்கிடையிலேயே ஆட்டம் கண்டன.

(வளரும்)



பாண்டி பஜார் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பின் கைதாகி அழைத்துச் செல்லப்படும் பிரபாகரன்.

# தியாகம் செய்கிறோம் என்று கூறும் அமைச்சர்களின் தியாகம் எங்கே?

## விஜித் ஹேரத் எம்.பி. கேள்வி



நாட்டின் உற்பத்தி வீழ்ச்சி மற்றும் அரசியல்வாதிகளின் ஊழல் நடவடிக்கைகளால் பொதுமக்கள் தற்போது சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் ஹேரத், இதனைத் தெரிவித்தார்.

நிதி நெருக்கடிக்கு மத்தியில் அமைச்சர்கள் தியாகங்களைச் செய்து முன்மாதிரியாக இருக்க வேண்டும் என அரசாங்கம் கூறுகின்றது.

இருப்பினும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது தனிப்பட்ட தேவைகளுக்காக அரச நிதியை பயன்படுத்துகின்றனர் எனக் குற்றம் சாட்டினார்.

ஒவ்வொரு அமைச்சருக்கும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவில் இருந்து ஐந்து லீற்றரை குறைக்க நிதியமைச்சர் முன்மொழிந்ததாக விஜித் ஹேரத் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் ஓர் அமைச்சருக்கு மாதாந்தம் 2 லட்சத்து 70 ஆயிரம் கொடுப்பனவுகள் கிடைக்கும் நிலையில் எரிபொருளுடன் சேர்த்து இவற்றையும் குறைக்க முடியும் என விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரசாங்கம் உண்மையில் மாற்றத்தையும்பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதிலும் ஆர்வமாககொண்டிருந்தால் இவ்வாறான விடயங்களை செய்ய வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

# மன்னார் மாவட்டத்தில் கொவிட் அதிகரிப்பு!

## பிராந்திய சுகாதார பணிப்பாளர் தகவல்



மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வரும் நிலையில் கடந்த 5 நாள்களில் மாவட்டத்தில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த.விநோதன் விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் அவர் தெரிவித்தவை வருமாறு -

மன்னார் மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனையின் போது மேலும் புதிதாக 41 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த 5 நாள்களில் 197 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.இந்தவருடம்398கொரோனா தொற்றாளர்களும் மாவட்டத்தில் தற்போது வரை 3 ஆயிரத்து 581 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.மாவட்டத்தில் இதுவரை 36 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளன என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்கு பிணை; மேன்முறையீட்டு நீதிமன்றம் அதிரடி உத்தரவு




20 மாதங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவை பிணையில் விடுவிக்கு மாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா வின் சார்பில் பிணை கோரிய மீள்திருத்த விண்ணப்பம் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு வந்தது.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் வழக்கில் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 2020 ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்ட சட்டத்தரணிக்கு எதிராக புத்தளம் மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பிணையில் விடுவிக்க கோரி தாக்கல் செய்த இரண்டு மனுக்கள் மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தை அவர் நாடியிருந்தார்.

# சுற்றுலா வரும் பயணிகளுக்கு கொவிட் காப்புறுதி அவசியம்!

நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கொரோனா காப்புறுதியைப் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், குறித்த காப்புறுதி 7 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்கள் வரையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னர் குறித்த காப்புறுதி 5 ஆயிரம் அமெரிக்க டொலர்களாகக் காணப்பட்டது.

நாட்டின் சுற்றுலா வலயத்துக்கு அருகில் பிரத்தியேகமானதொரு பொலிஸ் பிரிவொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், கல்கிசை மற்றும் உனவட்டுன பகுதியில் அதற்கான கட்டட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை,கடந்த மாதத்தில் மாத்திரம் 82 ஆயிரத்து 327 வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# நாட்டின் தற்போதைய பிரச்சினை பற்றி ஜனாதிபதி கோட்டாவுக்கு புரிதலில்லை!

## டியூ.குணசேகர சாடல்

நாட்டின் தற்போதைய பிரச்சினைகள் பற்றி ஜனாதிபதிக்கோ, அமைச்சரவைக்கோ போதிய புரிதல் கிடையாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா கம்யூனிஸ்ட் கட்சி கூட்டமொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு -

சுதந்திரத்தின் பின்னர் இந்த நாடு மிக மோசமான நெருக்கடியைத் தற்பொழுது எதிர்நோக்கியுள்ளது.

இந்த நெருக்கடிகளுக்கு என்ன காரணம் என்பது பற்றி ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ, அமைச்சரவைக்கோ, ரணில் விக்ரமசிங்கவிற்கோ, சஜித் பிரேமதாஸவிற்கோ அல்லது ஜே.வி.பிக்கோ தெரியவில்லை.

திறைசேரியில் பணம் இல்லாத பிரச்சினைக்கு பணத்தை அச்சிடுவது ஒரு தீர்வாக அமையாது. அரசியல் செய்யாத ஒருவர் நன்றாக ஆட்சி செய்வார் என நான் தனிப்பட்ட ரீதியில் இந்த ஜனாதிபதி மீது அபிப்பிராயம் கொண்டிருந்தேன்.

அரசியல் செய்யாத ஒருவரால் ஆட்சி செய்ய முடியாது. கட்டளை இட்டு இராணுவ வழிமுறைகளில் ஆட்சி செய்யவே முடியாது. அவ்வாறு செய்து அரசாங்க உத்தியோகத்தர்களை வேலை செய்யச் சொல்ல முடியாது.

கொள்கை அமுலாக்கத்தில் பாரியளவில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. வரி வருமானத்தின் ஊடாக திறைசேரிக்கு பணம் வருவதை உறுதி செய்ய வேண்டுமென டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

# தலவாக்கலையில் பாரிய தீ பல ஏக்கர் எரிந்து நாசம்

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலவாக்கலை தொழிற்சாலைக்கு மேல் உள்ள பற்றைக்காட்டு பகுதியில் பாரிய தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வரட்சியான காலநிலையுடன் கடும் காற்று நிலவி வருவதால் தீ மிக வேகமாகப் பரவி வருவதாகவும் தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவது கடினமாக உள்ளதாகவும் பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்தகாட்டுப்பகுதிக்கு அடையாளந்தெரியாத எவராவது தீ வைத்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

தீ பரவல் காரணமாக அறிய வகை தாவரங்கள் நீரூற்றுகள் சிறிய விலங்கினங்கள் என பலவும் அழிவடையும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

தற்போது நுவரெலியா மாவட்டத்துக்கு ஏற்பட்டுள்ள வரட்சியான காலநிலையைத் தொடர்ந்து பல வளமான காட்டு பகுதிகளுக்கும் புற்தரைகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளன.

இதனால் பெரும்பாலான வனப்பகுதி அழிவுக்குள்ளாகியுள்ளன.

இந்த காடழிப்பு காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பல பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இந்த காடழிப்புடன் தொடர்புடையவர்களை உடன் கைது செய்யப்பட்டு காடுகளுக்கு தீ வைப்பதை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பலரும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# யோக்கட்டின் விலை சடுதியாக எகிறலாம்

இலங்கையில் எதிர்வரும் நாள்களில் யோக்கட் ஒன்றின் விலை 55 - 60 ரூபா வரை அதிகரிக்க நேரிடும் என இலங்கை பால் சங்கத்தின் உப தலைவர் மஞ்சுள நிஷாந்த தெரிவித்துள்ளார். இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாக எதிர்வரும் நாள்களில் இந்த நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

டொலர் தட்டுப்பாடு காரணமாக 2020 ஆம் ஆண்டு 30 ரூபாவாக இருந்த யோகட்டின் விலை தற்போது 50 ரூபாவாக அதிகரித்துள்ள போதிலும் உற்பத்தியாளருக்கு இலாபம் இல்லை என மஞ்சுள நிஷாந்த தெரிவித்துள்ளார். பால் தட்டுப்பாடு மற்றும் மூலப்பொருள்களின் விலை உயர்வு ஆகியவற்றால் யோக்கட் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். இந்தப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



# மக்கள் குடியிருப்புக்குள் தலைமன்னாரில் முதலை

மன்னார் - தலைமன்னார் கிராமம் பகுதியிலுள்ள வீடொன்றிற்குள் நேற்று (திங்கட்கிழமை) காலை புகுந்த முதலையால், அப்பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

மேற்படி முதலையை பிரதேசவாசிகள் பிடித்து வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட முதலை சுமார் நான்கு அடி நீளம் கொண்டது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பிரித்தானியாவின் அமைச்சர் அஹமட்டுக்கு சில தமிழ் எம்.பிக்கள் இணைந்து கடிதம்!

## அவரது இலங்கை விஜயத்தில் மனவருத்தம் நேரில் சந்திப்பதற்கும் அழைப்பு விடுத்தனர்

அண்மையில் சிறிலங்காவுக்கு விஜயம் செய்த பிரித்தானிய அமைச்சரும் பிரபுவுமாகிய அஹமட், சிறிலங்காவில் தொடரும் சட்டவிரோதமான கைதுகள் தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள், காணாமற்போதல்கள் பற்றி எந்தவித கருத்தும் தெரிவிக்கத் தவறியமைக்கு மனவருத்தத்தைத் தெரிவித்து, தமிழ் அரசியல்வாதிகள் பலர் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். இதுதொடர்பில் மேலதிக ஆதாரங்களை வழங்க நேரில் சந்திப்பதற்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

தெற்கு, மத்திய ஆசியா, ஐக்கிய நாடுகள் மற்றும் பொதுநலவாய நாடுகள் விவகார அமைச்சரும் மோதல்களின் பாலியல் வன்முறைகளைத் தடுப்பதற்கான பிரித்தானியப் பிரதமரின் சிறப்புப் பிரதிநிதியுமான அதிமதிப்பிற்குரிய ரரீக் அஹமட் பிரபு (The Rt. Hon. Lord (Tariq) Ahmad of Wimbledon) கடந்த மாதம் சிறிலங்காவுக்குப் பயணம் செய்து சிறிலங்காவின் ஜனாதிபதி, அமைச்சர்கள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் என குறிப்பிட்ட சிலரை சந்தித்திருந்தார்.

அவர்கள் எழுதிய கடிதத்தில் சிறிலங்கா பொலிஸ் துறைக்குப் பயிற்சி வழங்கும் நடவடிக்கையை ஸ்கொட்லாந்து பொலிஸ்துறை நிறுத்தியதை வரவேற்றுள்ள தமிழ் அரசியல் தலைவர்கள், இம்முடிவில் மாற்றம் இருக்காது என்று தாம் நம்புகின்றனர் எனவும் கூறியுள்ளனர். அத்துடன் அண்மையில் சிறிலங்கா பொலிஸ் துறையின் தடுப்பில் நடந்த சித்திரவதைகள் மற்றும் மரணங்கள் தொடர்பாக ஊடகங்களில் வெளிவந்த செய்திகளையும் கோடிட்டுக் காட்டியுள்ளனர். அத்துடன் நாட்டில் உள்ள தமக்கு அங்கு நடக்கும் மனித உரிமைகள் மீறல்கள் பற்றி வெளிப்படையாகக் கதைப்பதற்கு சுதந்திரம் இல்லை என்றும், வெளிநாடுகளில் உள்ள ஊடகவியலாளர்களே இந்தச் சம்பவங்கள் பற்றி அச்சமின்றி செய்தி வெளியிடும் நிலைமையே இப்போது காணப்படுவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் பாதுகாப்புப் படையினரால் தமிழர்கள் சட்டத்துக்குப் புறம்மான முறையில் கைதுசெய்யப்படுகின்றமை, கடத்தப்படுகின்றமை, சட்டத்துக்கு மாறாகத் தடுத்துவைக்கப்படுகின்றமை பற்றிய முறைப்பாடுகள் தொடர்ச்சியாகத் தமக்குக் கிடைக்கின்றன எனவும், அது மட்டுமன்றி பல தமிழ் இளைஞர்கள் மர்மமான முறையில் காணாமல் போகின்றமையும் பின்னர் மரணமடைவதும்  பற்றி அதிர்ச்சியூட்டும் தகவல்களும் தமக்குக் கிடைக்கின்றன எனவும் அவர்கள் அந்த மடலில் தெரிவித்துள்ளார்கள்.

அத்துடன், போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இலங்கை அதிகாரிகள் மீது பிரித்தானியா தடை விதிப்பதுடன் அதனது உலகளாவிய நீதி அதிகாரத்தைப் பயன்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், எங்களது மக்கள் பலரை நாட்டைவிட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் புகலிடம் கோருவதற்குக் காரணமாக இருக்கும் தற்போதும் நடந்துகொண்டிருக்கும் மோசமான மனித உரிமை மீறல்கள் பற்றி பிரித்தானியா பேசவேண்டும் என்றும் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் இது தொடர்பான நேரடி வாக்குமூலங்கள், மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதல் ஆதாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், இது தொடர்பில் பிரித்தானிய அரசு அர்த்தமுள்ள நடவடிக்கை எடுப்பதற்கு உதவுவதற்கும், தாங்கள் தயாராக இருப்பதாவும், இதற்காக ஒரு சந்திப்பை நாங்கள் கோருகிறோம் என்றும் அந்தக் கடிதத்தில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நீதியரசரும், முன்னாள் வடமாகாண முதலமைச்சரும், தற்போதய நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகிய தர்மலிங்கம் சித்தார்த்தன், வன்னி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், விநோநோகராதலிங்கம், சாள்ஸ் நிமலநாதன், மட்டக்களப்பு மாவட்ட் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் ஆகியோருடன், தமிழ்மக்கள் தேசிய கூட்டணியின் செயலாளர் நாயகமும், முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமாகாணசபையின் முன்னாள் அமைச்சரும் ஈழத் தமிழர் சுயேச்சைக் கழகத்தின் பொதுச்செயலருமான அனந்தி சசிதரன் ஆகியோரும் இந்தக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளார்கள்.  யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினாராகிய சிவஞானம் சிறிதரன் அவர்களும் இதே கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார்.

சிறிலங்கா பொலிஸ் துறையின் தடுப்பில் நடைபெற்ற சித்திவதைகளும் மரணங்களும், எழுந்தமானமான கைதுகள், சட்டவிரோத தடுத்துவைப்புக்கள், காணாமற்போதல்கள், மர்மச்சாவுகள் என்பன பற்றிய தொடர் அறிக்கைகள், சமீபத்தில் பாதிக்கப்பட்டவர்களது விவரங்கள், தூண்டுதலாக அமையும் காரணங்கள், முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் மீதான வன்முறை, இந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் என பல்வேறு உப தலைப்புக்களில் இந்தக் கடிதம் விரிவான விவரங்களுடன் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு தலைப்புக்களுக்குக் கீழும் ஊடகங்களில் வந்த சம்பவங்கள் ஆதாரமாக  வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், நவம்பர் 2019 முதல் இன்றுவரையான காலப்பகுதியில், ஊடகங்களில் பதிவான, 809 மனித உரிமைமீறல் சம்பவங்கள் ஆவணப்படுத்தப்பட்ட, 66 பக்கங்கள் கொண்ட விரிவான பட்டியலும் இணைத்து அனுப்பி வைக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் ICPPG யின் இயக்குநர் திருமதி அம்பிகை செல்வகுமார் சுட்டிக் காட்டியமை போல், 'இலங்கையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழ் சமூகத்தின் பிற பிரதிநிதிகள் தங்கள் உயிரைப் பணயம் வைத்து கையொப்பமிட்டு இணைந்து அனுப்பிய இந்தக் கடிதம், தமிழர்களின் தற்போதைய பாரதூரமான அவலத்தை எடுத்துக்காட்டுவதோடு, தொடரும் இனப்படுகொலையைத் தடுக்க அவசரத் தலையீடுகளைக் கோருகிறது. குற்றவியல் சாட்சியங்கள் சேகரிப்பு, ஒருங்கிணைப்பு செயல்முறை மற்றும் சர்வதேச சுயாதீன விசாரணை பொறுப்புக்கூறல் செயல்முறைகளை அவசரமாகத் தொடங்க UNHRC/OHCHR கோருவதற்கு இது பிரித்தானிய அரசாங்கத்துக்கு உதவுகிறது. வெளிநாட்டில் வாழும் ஒவ்வொரு தமிழரும், மனித உரிமை அமைப்புகளும் இந்தக் கடிதத்தை மற்ற ஆதாரங்களுடன் சமர்ப்பித்து, தங்கள் அரசுக்கு இராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறு கோருமாறு அவர் வேண்டுகோள் விடுக்கிறார்;

* சர்வதேச அளவில் பொறுப்புக்கூறல் செயல்முறையை ஆராய்ந்து உடன் தொடங்கவும்.
* உறுப்பு நாடுகளில் நீதித்துறை நடவடிக்கைகளைத் தொடங்குதல்.
* இலங்கையில் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களை தம்தமது எல்லைக்குட்பட்ட அல்லது உலகளாவிய அதிகார வரம்பிற்குள் சர்வதேச நீதித்துறை நடவடிக்கைகளின் மூலம் விசாரித்தல்.
* உலகளாவிய மனித உரிமைகள் தடைகள் ஆட்சி முறையின் கீழ் இலக்குத் தடைகள், சொத்து முடக்கம் மற்றும் நம்பகமான போர்க் குற்றவாளிகளுக்கு எதிராக பயணத் தடை ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.
* இனப்படுகொலை இலங்கை அரசை எந்த வடிவத்திலும் ஆதரிப்பதை நிறுத்துங்கள்.
* இலங்கையில் நடத்தப்படும் நிகழ்வுகள் மற்றும் போட்டிகளை புறக்கணித்தல்.
* இலங்கைப் பிரஜைகள் தொடர்பான புகலிட நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும்.

அத்துடன், சர்வதேச சமூகம் தமிழ் மக்கள் மீது தொடரும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தி இலங்கை இராணுவத்தளபதி சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடை விதிப்பு அதிகாரசபையின் கீழ் தடை செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டியதுடன் தமிழ் மக்கள் மீது தொடரும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டிய தருணமிதுவாகும் என ICPPGயின் ஊடக இணைப்பாளர் திருமதி. கிறிஸ்ரி நிலானி தெரிவித்துள்ளார்.

கடந்த 12 ஏப்பிரல் 2021 அன்று, ITJP என்ற சர்வதேச மனித உரிமை அமைப்பு சவேந்திரசில்வா தொடர்பில் 50 பக்க குற்றப்பத்திரிகை ஒன்றை தயார்செய்து பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிடம் கையளித்திருந்தது. அதன் அடிப்படையில், சவேந்திரசில்வா உள்ளிட்ட இலங்கைப் போர்க்குற்றவாளிகளை 06 ஜூலை 2020 அன்று நடைமுறைப்படுத்தப்பட்ட பிரித்தானியாவின் உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான (Global Human Rights Regime) தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ் தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 01 மே 2021 அன்று ICPPGஇனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய அரசிற்கு அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

மேலும், இதுதொடர்பில் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்த தமிழ் இளையோர் சவேந்திர சில்வாவை தடைசெய்யும் முயற்சிக்கு சர்வதேச ஆதரவை திரட்டும் நோக்கில் கடந்த வருடம் இணைய வழி கையெழுத்து போராட்டம் ஒன்றை ஆரம்பித்ததுடன் அனைத்து பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தொடர்பு கொண்டு தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டு 18 மே 2021 அன்று பிரித்தானிய நாடாளுமன்றில் ஸ்கொட்லாந்து தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மக்லோக்லின் ஆன் அவர்களால் முன்மொழியப்பட்டு கொண்டுவரப்பட்ட முன்பிரேரணைக்கு (EDM 64) ஆதரவு கோரி இதுவரை இப்பிரேரணைக்கு 32 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கையெழுத்தும் பெறப்பட்டுள்ளதுடன் கறுப்பு ஜூலை தினத்தை முன்னிட்டு ஜூலை 23 ஆம் திகதி பிரித்தானிய பிரதமருக்கு ICPPG இன் ஆதரவுடன் மனுவொன்றையும் சமர்ப்பித்திருந்தார்கள்.

அத்துடன் இளையோர் சவேந்திர சில்வா உள்ளிட்ட போர்க்குற்றவாளிகளை பிரித்தானியா தடை செய்ய அனைவரின் ஆதரவினையும் கோரி காணொளி ஒன்றினையும் வெளியிட்டதுடன் இதுவரை 60 இற்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் போர்க்குற்றவாளிகளைத் தடைசெய்யக் கோரி சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அரசாங்கம், CID, TID மற்றும் இராணுவத்தினால் தொடரும் மனித உரிமை மீறல்களிற்கு ICPPG தனது கண்டனத்தை தெரிவிப்பதுடன் இலங்கையில் தொடரும் இனப்படுகொலையைத் தடுத்து நிறுத்தி சர்வதேச சுயாதீன விசாரணையை உடனடியாக ஆரம்பிக்குமாறு பிரித்தானிய அரசாங்கம் உட்பட சர்வதேச அரசாங்கங்களையும், UNHRC இனையும் ICPPG வலியுறுத்துகிறது. யுத்தம் முடிவடைந்து ஏறக்குறைய 13 வருடங்களாக தமிழ் இனப்படுகொலை இன்றும் தொடர்கிறது. இது உடன் நிறுத்தப் பட வேண்டும். மார்ட்டின் லூதர் கிங், ஜூனியர் கூறியது போல், இறுதி அழிவு என்பது கெட்டவர்களின் அடக்குமுறை மற்றும் கொடுமையால் நிகழ்வது அல்ல, ஆனால் அதைக் குறித்து நல்லவர்கள் காட்டும் அமைதியாலேயே நிகழ்கிறது.- என்றுள்ளது.

## சுவிஸ் தூதரக முன்னாள் ஊழியருக்கு எதிரான வழக்கு விசாரணை ஓகஸ்டில்!

2019 ஆம் ஆண்டு இனந்தெரியாத சிலரால் கடத்தப்பட்டதாகக் கூறி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் பொய்யான வாக்குமூலங்களை வழங்கியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள சுவிஸ் தூதரகத்தின் முன்னாள் உத்தியோகத்தர் ஒருவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் சாட்சிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த வழக்கு நேற்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 5 ஆம் திகதி சாட்சிய விசாரணையை ஆரம்பிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நாமல் பல்லல்ல உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகள் நேற்று குற்றப்பத்திரிகையின் ஆங்கில மொழிபெயர்ப்பொன்றை குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் திறந்த நீதிமன்றத்தில் கையளித்துள்ளனர்.

வழக்கின் முதலாம் மற்றும் இரண்டாவது சாட்சியை எதிர்வரும் ஓகஸ்ட மாதம் 5ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்பட்டதாகக் கூறி, குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் பொய்யான வாக்குமூலங்களை வழங்கிய குற்றச்சாட்டின் பேரில், முன்னாள் சுவிஸ் தூதரகப் பணியாளர் மீது கொழும்பு உயர் நீதிமன்றம் குற்றப்பத்திரிகை கடந்த ஆண்டு தாக்கல் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## நாடு நாசமாய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நிலைமை ஏற்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம் முதல், அம்பாந்தோட்டை துறைமுகம் வரை திட்டமிடப்படாத நிகழ்ச்சி நிரலின் கீழ் சென்றுவிட்டது. இப்படித்தான் ஆட்சியாளர்கள் செய்துவிட்டுச் செல்கின்றனர். அரசிடம் சரியான திட்டமிடல் இல்லை.

இப்போது மின்சாரம், எரிபொருள் எல்லாமே பிரச்சினையாக உள்ளது. பொருள்களின் விலையை வியாபாரிகளே நிர்ணயிக்கின்றனர். இதற்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே பதில் கூற வேண்டும். அடுத்த தேர்தல்தான் இதற்குப் பதில் கூற வேண்டும். பஸில் ராஜபக்ஷ பொருளாதாரக் கொள்கையை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்க்க வேண்டும் - என்றார்.

## பீரிஸ் - ஜெய்சங்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது குறித்து ருவிட்டர் பதிவொன்றை இட்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மிகவும் வினைத்திறனாக இந்தப் பேச்சு அமைந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை - இந்திய இராஜதந்திர உறவின் 75 ஆம் ஆண்டு பூர்த்தியைப் பொருத்தமான முறையில் அனுஷ்டிக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

பொருளாதாரத்தை சக்திமயப்படுத்தல், அதற்காக சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாகவும் விரிவாக அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்தும் கலந்துரையாடப்பட்டது எனவும், இந்த விடயத்தில் இரண்டு தரப்புக்கும் இடையிலான பரஸ்பர பொறிமுறை ஒன்றை விரைவில் கொண்டுவர வேண்டும் என இணங்கப்பட்டது எனவும் எஸ். ஜெய்சங்கர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஏலத் தொகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கடற்படையால் பிடிக்கப்பட்டபோதும், அவை இலங்கை நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட படகுகளாக இருந்தன. அவற்றினை நாம் நேரில் சென்று பார்த்த போதும் உடனடியாக எடுத்து வரமுடியாத நிலைமை காணப்பட்டது. இதனால் அவை தொடர்பில் நான் ஆராய்ந்து கொண்டிருந்த போது கொரோனாத் தாக்கம் ஏற்பட்டுவிட்டது.

இருந்தபோதும் தற்போது 2020ஆம் ஆண்டுவரையில் கைப்பற்றப்பட்ட படகுகளையும் சேர்த்தே இலங்கை அரசு ஏலம் விடுகின்றது. இதே இலங்கை அரசிடம் எம்மை விடவும் அதிகம் துன்பப்பட்டவர்களான ஈழத் தமிழர்கள், இன்று எமக்கு ஏற்படும் துன்பைத்தை கண்டு கொள்ளாமை வருத்தமளிக்கின்றது.

இலங்கையில் அகப்பட்டுள்ள 200 படகுகளில் நூற்றிற்கும் மேற்பட்ட படகு உரிமையாளர்கள் சிறுவயது முதலே மீனவராக இருந்து சிறுகச் சிறுக சேமித்து மிகுதியை கடன்வாங்கியே இந்த படகுகளை வாங்கினார்கள். இன்று அவர்கள் தாம் பெத்த பிள்ளைகளுக்கே உணவளிக்க முடியாமல் தவிக்கிறார்கள்.

இதேநேரம் இலங்கை படையினர் தமது தேவை முடிந்த பின்பு இதே ஈழத் தமிழர்களை மீண்டும் விரட்டியடிப்பர். அப்போது இதே இந்திய மீனவனே கைகொடுப்பான். நாம் எட்டி உதைக்க மாட்டோம். மாறாக, இரு கரம் கொடுத்து வரவேற்கும்போது, ஈழத்தமிழர்கள் இன்று எமக்கு முதுகில் குத்தும் வலியின் வேதனையைப் புரிந்துகொள்வர். - என்றார்.

## கோட்டா - மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அலரி மாளிகையில் நடைபெற்றது.

அடுத்த வார நாடாளுமன்ற நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது.

மின் நெருக்கடிக்குத் தீர்வு காணல், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களைப் பயன்படுத்துதல், ஏற்றுமதிப் பொருளாதாரத்தை மேம்படுத்துதல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் இதன்போது விவாதிக்கப்பட்டன.

எதிர்காலத்தில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டம் தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ விசேட விளக்கமளித்தார்.

குறித்த கூட்டத்தில் தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அலி சப்ரி உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதமரின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன, பிரதமரின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்புச் செயலாளர் பிரியந்த ரத்நாயக்க உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## விசேட அதிரடிப்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பிரதேசத்தில் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் 7.30 மணியளவில் இடம்பெற்றதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவில் உடையில் வந்த விசேட அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவரும், கொட்டனால் தாக்கப்பட்டு இன்னொருவருமாக இருவர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானவர் கையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சட்ட விரோத மதுபானம் விற்பனை செய்வதாகத் தெரிவித்தே தங்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தாக்குதலுக்குள்ளானவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட விசேட அதிரடிப் படையினரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். அவர்களை சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் ச.இளங்கோவன் பிணையில் விடுவித்துள்ளார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பெண்கள் மற்றும் 5 ஆண்கள் கைதுசெய்யப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இதில் 9ஆவது சந்தேகநபரான ஆனந்தராஜா என்பவர் கைதுசெய்யப்படாத நிலையில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. குறித்த 8 பேருக்கும் ஆதரவாக சி.எச்.ஆர்.டி. நிறுவனம் சட்ட உதவியை வழங்கியிருந்தது. இந்த நிறுவனத்தின் ஊடாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கலும் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஆலோசனை சபைக்கு குறித்த விடயம் விசாரணைக்காகப் பாரப்படுத்தப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துக்குக் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் பலனாக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் 7:1 பிரிவின் பிரகாரம் சட்டமா அதிபரால் பிணையில் விடுவிப்பதற்கான சம்மதக் கடிதம் நீதிமன்றத்துக்கு அனுப்பட்டிருந்தது. இதையடுத்துத் தடுத்து வைக்கப்பட்டவர்கள் சார்பில் வவுனியா நீதிமன்றத்தில் சட்டத்தரணி செ.கேதீஸ்வரன் ஆஜராகி குறித்த கடிதம் தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதன் பிரகாரம் 8 பேரும் பதில் நீதிபதி க.தயாபரனால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (100)

# பள்ளமடு - விடத்தல்தீவு வீதியில் இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

### விபத்தா? கொலையா? எனப் பொலிஸார் தீவிர விசாரணை

(மன்னார் நிருபர்)



மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளமடு - விடத்தல்தீவு பிரதான வீதிக்கு அருகில் நேற்று காலை இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சன்னார் கிராமத்தைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான கே.பாஸ்கரன் (வயது 33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் தனது வீட்டிலிருந்து நேற்றுமுன்தினம் விடத்தல் தீவு கிராமத் துக்குச் சென்றுவிட்டு மீண்டும் தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் திரும்பியுள்ளார்.

இந்நிலையிலே குறித்த குடும்பஸ்தர் நேற்று காலை பகுதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலத்துக்கு அருகில் இருந்து அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த அடம்பன் பொலிஸார் இது விபத்தா? அல்லது கொலையா? என்பது தொடர்பாகத் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். பல்கலைக்கழக 2 மாணவிகள் மோதல்

### ஒருவர் வைத்தியசாலையில்

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் இரு மாணவிகள் மோதிக்கொண்டதில் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவைச் சேர்ந்த மாணவி ஒருவரும், மருத்துவபீடத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் வாடகை அறையில் தங்கியிருந்துள்ளனர்.

இந்நிலையில், கலைப் பீட மாணவி ஒருவர் அடிக்கடி தொலைபேசியில் பேசி வருகின்றமையால்தனது கற்றலுக்கு இடையூறாக இருக்கின்றது என மருத்துவபீட மாணவி பல தடவைகள் சொல்லிக் காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கலைப்பீட மாணவி அதிக நேரம் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தபோது மருத்துவபீட மாணவி இரண்டு, மூன்று தடவைகள் தனது கற்றலுக்கு இடையூறாக இருப்பதாக சுட்டிக்காட்டியபோதும், கலைப்பீட மாணவி அதனைப் பொருட்படுத்தவில்லை.

கோபமடைந்த மருத்துவபீட மாணவி தன்னுடைய தொலைபேசியைக் கலைப்பீட மாணவியின் முகத்தில் எறிந் துள்ளார். இதனால் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்ட நிலையில் நண்பர்களின் தலையீட்டால் சமரசம் செய்யப்பட்டது. எனினும், இந்தத் தாக்குதலில் காயமடைந்த கலைப்பீட மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## ஒன்றரை வயது குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதி

பதுளை, ஹப்புத்தளையில் ஒன்றரை வயது ஆண் குழந்தைக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனப் பதுளை மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் உப தலைவர் சுப்பிரமணியம் சுதர்சன் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

பதுளை, ஹப்புத்தளையில் 28 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் குறித்த குழந்தை உள்ளிட்ட 18 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



பருத்தித்துறை, கிராமக்கோட்டுச் சந்திக்கு அருகாமையிலுள்ள பருத்தித்துறை பிரதேச சபைக்குரிய காணியில் பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 10.85 மில்லியன் ரூபாவில் கடைத்தொகுதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தக் கடைத்தொகுதிக்கான அடிக்கல்லை நேற்று பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார் நாட்டி ஆரம்பித்து வைப்பதையும், பிரதேச சபையின் செயலாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் சமூகமளித்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## தமிழக மீனவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டன.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக மீனவர்களின் 135 ட்ரோலர் படகுகள் காரைநகர் கடற்படைத் தளத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இவ்வாறு தடுத்த வைத்திருந்த படகுகளே நேற்று ஏலத்தில் விடப்பட்டன.

கொழும்பில் இருந்து வருகை தந்த மீன்பிடித் திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவின் முன்னிலையில் குறித்த படகுகள் ஏலத்தில் விடப்பட்டன.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான ஏல விற்பனை பிற்பகல் 2 மணிக்கு நிறைவடைந்தது.

இதன்போது 135 படகுகளும் 52 இலட்சத்து 20 ஆயிரத்து 500 ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டன. இவற்றில் உச்சபட்சமாக ஒரு படகு 13 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இதேநேரம் காங்கேசன்துறையிலுள்ள தமிழக மீனவர்களின் 8 படகுகள் இன்று ஏலம் விடப்படவுள்ளன.

# 3 தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொது போக்குவரத்தில் பயணிக்க முடியும்?



## இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு

பொது போக்குவரத்தை பயன்படுத்தும்போது தடுப்பூசி அட்டையை கட்டாயமாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர் கூறியவை வருமாறு -

சுகாதாரத்துறையிலிருந்து சுற்றறிக்கை அல்லது விழிப்புணர்வை மேற்கொண்டால், மூன்று தடுப்பூசிகளையும் பெற்றவர்கள் மட்டுமே பொது போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்ற வழிமுறையை கடைப்பிடிக்க நேரிடும் எனத் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் இது ஒரு தொற்றுநோய் என்றும் அந்த நிலைமை தொடர்பான முடிவுகளை சுகாதார அமைச்சே எடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இவர்கள்தான் பொதுப் போக்குவரத்தில் பயணிக்க வேண்டும் என்று அவர்கள் தமக்கு அறிவுறுத்தல் வழங்கினால், அந்த வழிமுறைக்கு ஏற்றாற்போல் மாறவேண்டி ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக எழுத்துபூர்வமாக எந்த அறிவிப்பையும் தாங்கள் அளிக்கவில்லை என்றும் ஆனால் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு எழுத்து மூலம் தமக்கு அறிவிக்கப்படுமாயின், தனியார், அரச பஸ்கள் மற்றும் ரயிலுக்கு அறிவிக்கப்பட்டு தடுப்பூசி அட்டைகளை சரிபார்க்க அறிவுறுத்தலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் நேற்று முதல் தொடர் பணிபுறக்கணிப்பில்!

அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் நேற்று (திங்கட்கிழமை) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

பதவி உயர்வு, இடர்கால கொடுப்பனவு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு கிடைக்கும் வரையில் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 15 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளன.

குறிப்பிட்ட காலத்தில் அவசர மற்றும் உயிர் காக்கும் சேவைகளில் மாத்திரமே தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுவார்கள் என அறிவித்துள்ளனர். அரச தாதி உத்தியோகத்தர் சங்கம் நேற்று (திங்கட்கிழமை) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

பதவி உயர்வு, இடர்கால கொடுப்பனவு, சம்பள முரண்பாடு உள்ளிட்ட பிரச்சினைகளை முன்வைத்து தீர்வு கிடைக்கும் வரையில் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். நாடளாவிய ரீதியில் 15 சுகாதார தொழிற்சங்கங்கள் இணைந்து இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

குறிப்பிட்ட காலத்தில் அவசர மற்றும் உயிர் காக்கும் சேவைகளில் மாத்திரமே தாதிய உத்தியோகத்தர்கள் ஈடுபடுவார்கள் என அறிவித்துள்ளனர்.

# சுசிலின் அமைச்சு பதவியை ஏற்க மறுத்த திஸாநாயக்க!

இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்து சுசில் பிரேமஜயந்த நீக்கப்பட்டதை வெற்றிடமாக உள்ள கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகங்கள், தொலைக்கல்வி ராஜாங்க அமைச்சர் பதவியை எஸ்.பி.திஸாநாயக்கவுக்கு வழங்கு யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் அந்த அமைச்சு பதவியை எஸ்.பி. திஸாநாயக்க மறுத்துள்ளார் என அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான பல காரணங்களை அரசாங்கத்தின் உயர் மட்டத்திடம் அவர் முன்வைத்துள்ள போதிலும் அவை என்ன என்ற தகவல்கள் வெளியாகவில்லை.

எவ்வாறாயினும் இது சம்பந்தமாக தொடர்ந்தும் பேச்சு நடப்பதாகக் கூறப்படுகிறது.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மற்றும் தவறுகளை வெளிப்படையாக விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்தவை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினார் என்பது தெரிந்ததே.

# நாயால் ஏற்பட்ட தகராறு சகோதரன் வெட்டி கொலை

பனாமுற பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூலஎடியாவல பிரதேசத்தில் தனது சகோதரனை கைகோடரி மற்றும் கத்தியால் குத்தி நபர் ஒருவர் படுகொலை செய்துள்ளார். இந்தக் கொலை சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் குழந்தையை சகோதரன் வீட்டில் இருந்த நாய் கடித்ததில் ஏற்பட்ட தகராறில் சந்தேக நபரின் மனைவி கத்தியால் குத்தித்தப்பட்டு காயமடைந்துள்ளார்.

இதன் காரணமாக குறித்த சந்தேகநபர் கோடரி மற்றும் கத்தியால் தாக்கி இந்த கொலையை செய்துள்ளார் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. உயிரிழந்தவர் எம்பிலிப்பிட்டிய, முலஎடியாவல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 27 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பனாமுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வீதியில் கிடந்த பெறுமதியான தங்கம் ஓட்டோ சாரதியின் நெகிழ்ச்சி செயல்

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் விழுந்து கிடந்தபணம்மற்றும்நகையை அதன் உரிமையாளரை தேடிச் சென்றுசாரதிஒருவர்ஒப்படைத்துள்ளார்.



6 பவுன் பெறுமதி தங்க நகை மற்றும் 27 ஆயிரத்து 300 ரூபா பணம் என்பன உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.


ஆர்.ஏ. நிஷ்ங்க என்ற ஓட்டோ சாரதி ஒருவர் வீதியில் விழுந்து கிடத்த பெண்களின் கைப்பை ஒன்றை அவதானித்துள்ளார்.

அதனை சோதனையிட்ட போது பெறுமதியான தங்க நகை மற்றும் பணம் என்பன அதில் இருந்துள்ளன..

பையில் இருந்த தடுப்பூசி அட்டையில் குறிப்பிடப்பட்டிருந்த தொலைபேசி இலகத்துக்கு அழைப்பு மேற்கொண்டு உரிமையாளரிடம் தவறவிட்ட பணப்பையை ஒப்படைத்துள்ளார்.

தங்க நகை உரிமையாளரான பெண், ஓட்டோ சாரதியின் செயற்பாட்டிற்கு நன்றி தெரிவிப்பதற்காக ஹற்றன் பிரதேசத்தில் உள்ள அவரின் வீட்டுக்கு சென்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவைத்தியசாலை தாதியர்கள் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபாடு!





வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் தாதியர்கள் சம்பளப் பிரச்சினை உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

தாதியர்கள் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடளாவிய ரீதியில் நேற்று (திங்கட்கிழமை) பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு ஆதரவாக வவுனியா வைத்தியசாலையிலும் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது 3 ஆயிரம் ரூபாவாக உள்ள விசேட கடமைக் கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக உயர்த்துதல், தொழில் வல்லுநர் பட்டதாரிகளுக்கு திருத்தியமைத்த சம்பள அளவுத்திட்டத்தை நிர்ணயத்துடன் தகுந்த பதவி வாய்ப்புக்களைக் கிடைக்கச் செய்தல், ஆசிரியர் சேவை சம்பள உயர்வின் மூலம் தாதிய சேவைக்கு ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் மேற்படி பணிப்புறக்கணிப்பு போராட்டம் காரணமாக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் சேவை, நோயாளர் விடுதிகள், குருதி பரிசோதனை என்பனவற்றின் சேவைகளை பெற்றுக் கொள்வதில் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2022இல் வெளியிடப்பெற்றது.